செ.வெ.எண்: 04 நாள்: 03.01.2018

**மாநில அளவில் அரசு வாரியத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற செந்தூரான் பல்தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் அழைத்து பாராட்டினார்.**

அக்டோபர் 2017 அரசு வாரிய தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற செந்தூரான் பல்தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களை மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் (02.01.2018) அன்று நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், லேணாவிலக்கில் செந்தூரான் பல்தொழில்நுட்பக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் மூன்றாமாண்டு இயந்திரவியல் பாடப்பிரிவில் பயிலும் மாணவன் M. சீனிவாசன் அக்டோபர் 2017ல் நடந்த அரசு வாரியத் தேர்வில் 700-க்கு 696 மதிப்பெண் பெற்று மாநில அளவில் நான்காமிடம் பெற்றுள்ளார். இதேபோல் இரண்டாமாண்டு எலக்ட்ரானிக்ஸ் அண்டு கம்யூனிகேசன் துறையை சார்ந்த மாணவி சிந்தியா 700-க்கு 695 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்தில் ஐந்தாமிடம் பெற்றுள்ளார்.

மேலும் முதலாமாண்டு பயிலும் மாணவன் M. அழகுராஜா 800க்கு 783 மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் சிறப்பிடம் பிடித்துள்ளார். இதே போன்று மூன்றாமாண்டு எலக்ட்ரிகல் அண்டு எலக்ட்ரானிக்ஸ் துறை மாணவன். R. சிவக்குமார் 700-க்கு 683 மதிப்பெண்கள் பெற்று கல்லூரிக்கும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். 52 மாணவர்கள் பல்வேறு பாடங்களில் 100க்கு 100மதிப்பெண் பெற்றுள்ளனர்.

இவ்வாறு அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவித்ததுடன் தொடர்ந்து சிறப்பாக கல்வி பயின்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் செந்தூரான் கல்விக்குழும தலைவர் திரு.வயிரவன், துணைத்தலைவர் திரு.நடராஜன், முதன்மை செயல் அலுவலர் திரு.கார்த்திக், கல்லூரி முதல்வர் திரு.செல்வராஜ், ஆட்டோமொபைல் துறைத்தலைவர் திரு.பிரேம்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**